**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 07.03.2025**

**O.S. 94/2020**

**வா.சா. 1 – பிறைசூடும் பெருமாள்பிள்ளை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது மனைவியின் பவர் தாரர் என்ற நிலையில் வழக்கு தாக்கல் செய்து அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 9 பவர் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கான சர்வே எண், விஸ்தீரணம் வேறு இந்த வழக்கு சொத்துக்கான சர்வே எண், விஸ்தீரணம் வேறு என்றால் சரியாக தெரியவில்லை. வழக்கு தபசில் சொத்துக்கள் திருவாடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் சிதம்பர வடிவு அம்மாளுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், மேற்படி சிதம்பரவடிவின் உறவினரான காசிவிஸ்வநாதனுக்கு கீழ்பாட்டத்துக்கு கொடுக்கப்பட்டதாகவும் வழக்கில் சொல்லியுள்ளேன் அதற்கு ஆவணம் உண்டா என்றால் உண்மை தான் குடும்பத்தில் கேட்டு சொல்கிறேன். சிதம்பரவடிவிற்கு காசிவிஸ்வநாதர் எப்படி சொந்தம் என்றால் தகப்பனார் வழி சொந்தம். எனது பிராதில் தாய்வழி சொந்தம் என்று சொல்லியிருந்தால் தவறு என்றால் மாமனார் மாமியார் ஒரே குடும்பம் தான். சிதம்பரவடிவு முகவரி என்ன என்றால் கீழத்தெருவில் வசித்து வந்தார் வீட்டு எண்

தெரியாது. சிதம்பர வடிவிற்கு பிள்ளைகள் உண்டா என்றால் பிள்ளைகள் கிடையாது. சிதம்பரவடிவிற்கும் தபசில் சொத்திற்கும் தொடர்பு இருந்ததை காட்ட ஆவணம் உண்டா என்றால் பாட்டவரவு ரசீது உண்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 1 முதல் 4 சிதம்பரவடிவு தனக்காக வேண்டி குத்தகை செலுத்தியதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அந்த ரசீது சிதம்பரவடிவிடம் தான் இருக்கும். வா.சா.ஆ 1 முதல் 4 காசிவிஸ்வநாதர், சுஜா மற்றும் நான் தபசில் சொத்தில் குத்தகைதாரர் என்ற உரிமையில் வழங்கப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றால் எங்கள் பெயரில் ரசீது போடசொன்னோம் ஆனால் அவர்கள் போடவில்லை. வா.சா.ஆ 1 முதல் 4 ன் படி எங்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சிதம்பரவடிவு, காசிவிஸ்வநாதருக்கு 1998 ன் கீழ் பாட்டம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் இருக்கிறது அதை தாக்கல் செய்யலாம். வா.சா.ஆ.9 ல் ஆதீன அலுவலர்களின் அனுமதியுடன் கீழ் பாட்டம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது அந்த விபரம் வழக்குறையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 1 முதல் 4, 1, 2 ஐட்ட சொத்துக்களில் எந்த சொத்துக்காக செலுத்தப்பட்டது என்றால் இரண்டு சொத்துக்களுக்காகவும் செலுத்தப்பட்டது.

ஜட்டம் 1க்கு எவ்வளவு பாட்டம் ஜட்டம் 2க்கு எவ்வளவு பாட்டம் என்றால் தலா நான்காயிரம், நான்காயிரம். வா.சா.ஆ.1, 2ல் நெல் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு ஜட்டங்களும் சேர்த்து ஒரு பூக்கு இரண்டு கோட்டம் சொல்லியுள்ளேன் என்றால் ஒரு வயலுக்கு இரண்டு கோட்டம் வேறு எதுவும் நியாபகம் இல்லை. ஒரு வருடத்திற்கு 8 கோட்டமா 4 கோட்டமா என்றால் சரியாக தெரியவில்லை. ஆதீனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 75 : 25 விகிதமா அல்லது 60:40 விகிதமா என்றால் தெரியாது.

**பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**